பின்னிணைப்பு I

1964ம் ஆண்டில் நாணயச் சபை மேற்கொண்ட பிரதான நிர்வாக நடவடிக்கைகள்.

# 1964ம் ஆண்டு நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட பிரதான நிர்வாக நடவடிக்கைகள்

(அ) சுற்றறிக்கை இலக்கம்—18

குறிப்பிலக்கம்: பீசி/பீ9/25/52

ஸ்ரீலங்கா மகாவங்கி,
த. பெ. இல. 590,
கொழும்பு,
தை 15, 1964.

வர்த்தக வங்கிகளுக்கு,

## மகாவங்கியின் நாணயமாற்று வீதங்கள்

மேற்குறிப்பு: 422ம் அத்தியாய நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 74ம் பிரிவு.

1964ம் ஆண்டு, தை மாதம் 15ம் திகதி முதல் ஸ்ரீலங்கா மகாவங்கி வர்த்தக வங்கியிடமிருந்து ஏற்றுமதி உண்டியல்களின் கழிவுகளினுல் தேறிய ஸ்டேர்லிங் வருமானங்களை, மகாவங்கியின் கொள்வனவு வீதமாகிய ஸ்ரீலங்கா ரூபா ஒன்றுக்கு 1சி.6 3/64 பெ. என்ற நியதிப்படி உடனடியாகக் கொள்வனவு செய்யும். அத்துடன் மகாவங்கி, ஸ்டேர்லிங்களை அதே நாளில் அதே வீதத்தில் எதிர்காலப் பரிமாறல் முறையிலும் விற்கும். இவ்வாறு விற்கப்படும் ஸ்டேர்லிங்களின் தொகை, மேற்கூறிய ஏற்பாட்டின்படி கொள்வனவு செய்யப்பட்ட கழிவுபெற்ற உண்டியல்கள் முதிர்ச்சியடையும் திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன்பு அல்லாத ஒரு நாளில் ஒப்படைக்கத்தக்க தொகைக்கு, மேற்படாததாக இருக்கும். இச்சுற்றறிக்கையில் நியமிக்கப்பட்ட விசேட வீதத்தில் எதிர்கால அடைப்பிற்கான ஸ்டேர்லிங் கோரும் ஒவ்வொரு விண்ணப்பமும் இச்சுற்றறிக்கையின் விதிகளுக்கிணங்கவே அமைந்துள்ளது என அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஓர் சான்றிதழுடன் மகாவங்கிக்கு அனுப்பப்படவேண்டும்.

இச்சுற்றறிக்கையிலுள்ள விதிகள் ஏந்நேரத்திலாவது விலக்கவோ, கூட்டவோ அல்லது திருத்தியமைக்கவோ படக்கூடும்.

எஸ். டி. அமரசிங்க,
பிரதம கணக்காளர்.

டி. சி. குணசேகர,
உப ஆட்சியாளர்.

(ஆ) சுற்றறிக்கை இலக்கம்: 19

ஸ்ரீலங்கா மகாவங்கி,
த. பெ. இல: 590,
கொழும்பு-1,
ஆவணி 24, 1964.

**திருப்பி நிதியீட்டம் செய்யப்பட்ட கணக்குகள்—**
**நடுத்தரகால, நீண்ட காலத் தவணைக் கொடுகடன்களுக்கான வட்டி விதம்.**

மேற் குறிப்பு: 1963ம் ஆண்டின் 11ம் இலக்க நிதிச்சட்டத்தின் 67ம் பிரிவின் படியான, நாணய விதி அதிகாரச் சட்டத்தின், பிரிவு 88 'எ' (1) (ஸி).

கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் அல்லது வியாபாரம் ஆகியனவற்றின் வளர்ச்சி அல்லது அபிவிருத்திக்காகக் கொடுகடன் தாபனங்களுக்கு மகாவங்கியால் வழங்கப்படும் திருப்பி நிதியீட்டுதல் நிதிக்கான கடன்களின் பேரிலுள்ள வட்டி வீதம், வருடத்திற்கு 5 சதவீதமாக இருக்கும்.

எஸ். டி. அமரசிங்க
பிரதம கணக்காளர்,
ஸ்ரீலங்கா மகாவங்கி.

டி. டபிள்யூ. இராஜபத்திரன
ஆட்சியாளர்,
ஸ்ரீலங்கா மகாவங்கி.

(இ) அமெரிக்க டொலர்களுக்கான மகாவங்கியின் நாணய மாற்று வீதங்கள்

| திகதி | சுற்றறிக்கை இலக்கம் | | வாங்குதல் $ 100க்கு | விற்றல் $ 100க்கு |
|---|---|---|---|---|
| 22/6/1964 | 1/196 | உடனடி எதிர்கால (3 மாதங்கள் வரை) | ரூ. 476. 25<br>ரூ. 476. 25 | ரூ. 476. 50<br>உடனடிக்கு எதிராக மாதாந்த அதிக விலை -/25 சதம் |
| 20/7/1964 | 1/197 | உடனடி எதிர்கால (3 மாதங்கள் வரை) | ரூ. 477. 00<br>ரூ. 477. 00 | ரூ. 477. 25<br>உடனடிக்கு எதிராக மாதாந்த அதிக விலை -/25 சதம் |